
**ராயல் லிவர்பூல் மற்றும்**
**பிராட்கிரீன் பல்கலைக்கழக மருத்துவமனைகள்**
**NHS அறக்கட்டளை**



*ஒன்றாக*
*உயர்வோம்*

# நோயாளிக்கான தகவல்

## நிட்டிசினோன் (**Orfadin®**) **2**மிகி கெட்டி காப்சூல்கள்

மருந்தக மற்றும் சிகிச்சையக வேதியியல் இயக்குநரகங்கள்

PIF 1601 V3

## முக்கியமான தகவல் – தயவுசெய்து பின்வருவனவற்றை கவனமாகப் படியுங்கள்

## நீங்கள் இந்த மருந்தை எடுத்துக்கொள்ளத் தொடங்குவதற்கு முன்பு இந்தத் தகவலேடு முழுவதையும் கவனமாகப் படியுங்கள்

- இந்தத் தகவலேட்டை வைத்துக்கொள்ளுங்கள். இதை நீங்கள் மீண்டும் படிக்க வேண்டியிருக்கலாம்.
- நீங்கள் மேற்கொண்டு ஏதேனும் கேள்விகள் கேட்க விரும்பினால், உங்கள் ஆலோசகரை அல்லது மருந்தாளரைக் கேளுங்கள்.
- இந்த மருந்து உங்களுக்கானது. உங்கள் மருந்தை ஒருபோதும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளாதீர்கள். உங்களுக்கு உள்ள அதே அறிகுறிகள் அல்லது நிலை அவர்களுக்கும் இருந்தாலும் பகிர்வது அவர்களுக்குத் தீங்கிழைக்கக்கூடும்.
- பட்டியலிடப்பட்டுள்ள பக்கவிளைவுகளில் எவையேனும் மிகவும் தொல்லையாக இருந்தால் அல்லது இந்த நோயாளிக்கான தகவலேட்டில் குறிப்பிடப்படாத பக்கவிளைவுகள் எவற்றையாவது நீங்கள் கவனித்தால், தயவுசெய்து உங்கள் ஆலோசகருக்கோ மருந்தாளருக்கோ தெரியப்படுத்துங்கள்.

**நிட்டிசினோன் என்பது என்ன? அது எதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது?**

நிட்டிசினோன் அல்காப்டன்யுரியா என்ற ஓர் அரிதான மரபணு நிலைக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. AKU என்ற இந்த நிலை, பிறப்பிலிருந்தே இருக்கும். AKU ஒரு என்சைம் இல்லாததால் ஏற்படுகிறது. இதன் விளைவாக, ஹோமோஜென்டிசிக் அமிலம் (HGA) என்ற பொருளைப் பிரித்துப் பயன்படுத்த உடலால் இயலாது. HGA உடலில் திரளும்போது, நீங்கள் எந்த அறிகுறிகளால் அவதிப்படக்கூடுமோ அவை அந்தத் திரட்சியால் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக:

- முதுகுத் தண்டிலும் பிற பெரிய மூட்டுகளிலும் கடுமையான மூட்டழற்சி
- இதய வால்வு சேதமடைதல்
- சிறுநீரகங்கள், விந்துப்பை, சிறுநீர்ப்பை, உமிழ்நீர் சுரப்பிகள் ஆகியவற்றில் கற்கள் உருவாதல்
- தசைநாண்கள், தசைகள், தசைநார்கள் ஆகியவை கிழிதல் (பிளத்தல் அல்லது உடைதல்)
- எலும்பு முறிவுகள்
- கேட்கும் திறனில் பிரச்சினைகள்
- சிறுநீரக சேதம்.

HGAவை இயங்காமல் செய்யும் என்சைமை நிட்டிசினோன் தடுக்கிறது. இது HGA உடலில் திரண்டு தீங்கிழைப்பதைத் தடுக்கிறது.

நீங்கள் புரதத்தை, குறிப்பாக டைரோசின், ஃபெனைலாலானைன் எனப்படும் புரதங்களைக் கொண்ட பொருட்களை, உண்ணும்போது உடல் HGAவை உருவாக்குகிறது, நீங்கள் நிட்டிசினோனை எடுத்துக்கொள்ளும் காலத்தில் இந்தப் பொருட்கள் குறைவாக உள்ள சிறப்புப் பத்தியம் ஒன்றைப் பின்பற்றுவது முக்கியமாகும். இந்தப் பொருட்களைக் கொண்ட உணவுகளையும் பானங்களையும் நீங்கள் தொடர்ந்து உட்கொண்டுவந்தால் உங்கள் ரத்தத்தில் டைரோசினின் அளவு மிகவும் அதிகமாகிவிடக்கூடும். இது கண்கள், சருமம், மைய நரம்பு மண்டலம் ஆகியவற்றில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

உங்கள் பத்தியத்தில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றி உங்கள் ஆலோசகர் மற்றும்/அல்லது உணவியல் நிபுணர் உங்களுடன் மேலும் விரிவாகப் பேசுவார். உணவியல் நிபுணர்கள் நீங்கள் குறிப்பாக எந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்பது குறித்து மேலும் தகவல்கள் அளிப்பார்கள், நீங்கள் பின்பற்ற ஒரு பத்தியத் திட்டத்தை அளிப்பார்கள்.

## நிட்டிசினோன் காப்சூல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்பு சோதிக்க வேண்டியவை

உங்களுக்கு நிட்டிசினோனுக்கு அல்லது நிட்டிசினோன் காப்சூல்களில் உள்ள பிற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருந்தால் நிட்டிசினோனை எடுத்துக்கொள்ளாதீர்கள். உங்களுக்கு இவற்றால் ஒவ்வாமை ஏற்படும் என்றால், இந்த மருந்தை எடுத்துக்கொள்ளத் தொடங்குவதற்கு முன்பு உங்கள் ஆலோசகருடன் அல்லது மருந்தாளருடன் பேசுங்கள்.

இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஆலோசகரிடம் அல்லது மருந்தாளரிடம் உங்கள் மருத்துவப் பின்னணியைச் சொல்லுங்கள், குறிப்பாக உங்களுக்குக் கண் பிரச்சினைகள் (எ.கா., கண் வலி, சிவத்தல், வீக்கம், உங்களுக்கு ஒளியால் இயல்பைவிட அதிகமாகக் கண்கள் கூசினால் அல்லது உங்களுக்குக் கண்புரை நோய் கருவிழிப்படலப் புண்கள் போன்ற பிற நிலைகள் இருந்தால்) எவையேனும் இருந்தால் சொல்லுங்கள். சிகிச்சை பெறத் தொடங்குவதற்கு முன்பு நீங்கள் ஒரு கண் சோதனை செய்துகொள்ள வேண்டியிருக்கலாம்.

நிட்டிசினோன் மூலமாக சிகிச்சை அளிக்கப்படும்போது உங்கள் கல்லீரல் செயல்பாடு, ரத்த உயிரணு எண்ணிக்கைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கத் தொடர்ந்து தவறாமல் வருகை தருமாறு உங்கள் ஆலோசகர் அறிவுரை அளிப்பார்.

**பிற மருந்துகள்**
நிட்டிசினோனின் செயல்பாட்டில் குறுக்கிடும் பிற மருந்துகள் இருக்கக்கூடும். நீங்கள் தற்போது பிற மருந்துகளை எடுத்துக்கொள்கிறீர்கள் என்றால், அல்லது சமீபத்தில் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், இந்தப் பிற மருந்துகளுக்குப் பரிந்துரைச் சீட்டு தேவைப்படாவிட்டால்கூட – உதாரணமாக மூலிகை மருந்துகள் அல்லது விட்டமின் துணைமருந்துகள் – அது குறித்து உங்கள் ஆலோசகரிடமும் மருந்தாளரிடமும் சொல்வது முக்கியமாகும்.

உங்கள் மருந்துகளின் மிகச் சமீபத்திய பட்டியல் ஒன்றை உங்களிடம் வைத்திருங்கள். உங்கள் மருந்துகளில் எதையாவது எடுத்துக்கொள்ளத் தொடங்கினால், நிறுத்தினால் அல்லது ஒரு புதிய டோஸுக்கு மாற்றினால், அது நிட்டிசினோனின் செயல்பாட்டில் குறுக்கிடுமா என்று உங்கள் ஆலோசகரிடம், மருந்தாளரிடம், அல்லது உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவரிடம் கேளுங்கள்.

**கர்ப்பமும் தாய்ப்பால் ஊட்டுதலும்:**
நீங்கள் கர்ப்பமாக இருந்தால், அல்லது கர்ப்பமானால், அல்லது தாய்ப்பாலூட்ட விரும்பினால், நீங்கள் நிட்டிசினோனை எடுத்துக்கொள்வதற்கு முன்பு உங்கள் ஆலோசகரை அல்லது மருந்தாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

**திறன் கொண்ட பணிகளைச் செய்தல் (எ.கா., வாகனம் ஓட்டுதல், இயந்திரங்களை இயக்குதல்)**:
நீங்கள் நிட்டிசினோனை எடுத்துக்கொள்ளும்போது உங்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டால், வாகனம் ஓட்டுவதற்கு அல்லது இயந்திரங்களை இயக்குவதற்கு முன்பு உங்கள் ஆலோசகரைத் தொடர்பு கொண்டு அறிவுரை பெற வேண்டும்.

**நிட்டிசினோன் காப்சூல்களை எடுத்துக்கொள்ளும் முறை**
எப்போதுமே நிட்டிசினோன் மாத்திரைகளை உங்கள் மருத்துவர் உங்களுக்குச் சொன்னபடியே எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை என்றால் உங்கள் ஆலோசகரிடம் அல்லது மருந்தாளரிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**மருந்தளிப்பு முறை**
நிட்டிசினோன் காப்சூல்கள் சாப்பாட்டுடன் வாய்வழியே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**டோஸ்**
தினமும் ஒரு காப்சூல் என்பது நிட்டிசினோனின் இயல்பான டோஸ். உங்கள் டோஸை தினமும் அதே நேரத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். இந்த மருந்தில் கூடுமான அளவு பலனடைய, நீங்கள் இதைத் தொடர்ந்து தவறாமல் எடுத்துக்கொள்வது முக்கியமாகும்.
**நீங்கள் உங்கள் நிட்டிசினோன் காப்சூல்களை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டால்**

எடுத்துக்கொள்ளத் தவறிய டோஸை உங்களுக்கு நினைவுக்கு வந்ததும் கூடுமான விரைவில் எடுத்துக்கொள்ளுங்கள். கிட்டத்தட்ட உங்கள் அடுத்த திட்டமிடப்பட்ட டோஸை எடுத்துக்கொள்ளும் நேரம் வந்துவிட்டால், எடுத்துக்கொள்ளத் தவறிய டோஸை விட்டுவிடுங்கள், உங்கள் அடுத்த டோஸை அறிவுரைத்தபடி எடுத்துக்கொள்ளுங்கள்.

**மாத்திரையை எடுத்துக்கொள்ள மறந்ததற்கு ஈடுசெய்ய இரண்டு டோஸாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.**

### நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டியதைவிட அதிக நிட்டிசினோன் காப்சூல்களை எடுத்துக்கொண்டால் என்ன செய்வது?

நீங்கள் நிறைய மாத்திரைகளை எடுத்துக்கொண்டுவிட்டால், அல்லது உங்கள் மருந்து வேறொருவர் எடுத்துக்கொண்டால், உடனே ஒரு மருத்துவரிடம் சொல்லுங்கள் அல்லது உங்களுக்கு மிக அருகில் உள்ள அவசர சிகிச்சைத் துறைக்கு (A&E துறை) செல்லுங்கள். மருந்துகள் மீதம் இருந்தால் அவற்றை அல்லது காலிப் பெட்டியை மருத்துவரிடம் காட்டுங்கள். அறிவுரை பெற நீங்கள் லிவர்பூலில் உள்ள தேசிய அல்காப்டன்யுரியா மையத்தையும் (National Alkaptonuria Centre - NAC) தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது தொடர்பு கொள்ளும்படி உங்கள் மருத்துவரிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

### நிட்டிசினோனால் ஏற்படச் சாத்தியம் உள்ள பக்கவிளைவுகள்

எல்லா மருந்துகளையும் போல நிட்டிசினோனும் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம், ஆனால் அவை எல்லோருக்கும் ஏற்படாது.

சில பக்கவிளைவுகள் நீங்கள் உங்கள் பத்தியத் திட்டத்தை சரியாகப் பின்பற்றாததாலும் நீங்கள் தவிர்க்க வேண்டிய உணவுகளை உண்பதால் அல்லது அருந்துவதாலும் ஏற்படக்கூடும்.

**கவலைப்படாதீர்கள்.** இந்தப் பக்கவிளைவுகள் ஏற்படக்கூடும், ஆனால் மிக அரிதாகவே ஏற்படக்கூடும் என்பதை அறிவது முக்கியமாகும்.

**பின்வரும் தீவிரமான பக்கவிளைவுகளில் எதையாவது கவனித்தால் நிட்டிசினோனை எடுத்துக்கொள்வதை நிறுத்திவிட்டு உடனே ஒரு மருத்துவரைப் பாருங்கள் – உங்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்: உடனடியாக உங்களுக்கு மிக அருகில் உள்ள அவசர சிகிச்சைத் துறைக்குச் செல்லுங்கள்.**

- ஓர் ஒவ்வாமை எதிர்வினை (எ.கா., அரிப்பு அல்லது தோலரிப்பு, முகத்தில் அல்லது கைகளில் வீக்கம், வாயில் அல்லது தொண்டையில் வீக்கம் அல்லது குறுகுறுப்பு, நெஞ்சில் இறுக்கம் அல்லது சுவாசிப்பதில் சிரமம்)
- மலம் கருப்பாக, தார் போல இருத்தல் அல்லது மலத்தில் ரத்தம்
- சிறுநீர் கருமையாக அல்லது மலம் வெளிறிய நிறத்தில் இருத்தல்
- மிகக் கடுமையான தாகம் அல்லது சருமம் சூடாக, வறண்டு இருத்தல்
- பார்வையில் பிரச்சினைகள், அல்லது ஒளி படும்போது கண்கள் மேலும் அதிகமாகக் கூசுதல்
- கண்கள் சிவத்தல், புண்ணாதல், வலித்தல், உப்புதல், அல்லது அவற்றில் எரிச்சல் ஏற்படுதல்
- திடீர் வயிற்றுவலி, மலச்சிக்கல், வாந்தி
- வழக்கத்திற்கு மாறான ரத்தக்கசிவு, கன்றுதல், அல்லது பலவீனம்
- கண்கள் அல்லது சருமம் மஞ்சளாதல்

பிற, அதிக தீவிரம் இல்லாத பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்பு அதிகம் இருக்கலாம். உங்களுக்குப் பின்வரும் பக்கவிளைவுகளில் ஏதேனும் ஏற்பட்டால் நிட்டிசினோனைத் தொடர்ந்து பயன்படுத்துங்கள், உங்கள் ஆலோசகருடன் அல்லது மருந்தாளருடன் இவை பற்றிப் பேசுங்கள்:

- காய்ச்சல், தொண்டைப் புண், இருமல், தசைவலிகள்
- சரும தடிப்பு ஏற்பட்டு அதில் அரிப்பு, செதில்கள் ஏற்படுதல், அல்லது தோல் உரிந்து வருதல்
- பேதி, குமட்டல், வாந்தி அல்லது மலச்சிக்கல்
- பதற்றமாக அல்லது சோர்வாக உணர்தல்
- உங்கள் மாதவிடாய் சுழற்சியில் மாற்றங்கள்
- தாகம்
- லேசான வயிற்றுவலி
- கவனம் குவிப்பதில் சிரமம் அல்லது நினைவுத்திறன் பிரச்சினைகள்.

பட்டியலிடப்பட்டுள்ள பக்கவிளைவுகளில் ஏதேனும் மிகவும் தொல்லையாக இருந்தால், அல்லது இந்தத் தகவலேட்டில் பட்டியலிடப்படாத பக்கவிளைவுகள் எவற்றையாவது நீங்கள் கவனித்தால், தயவுசெய்து உங்கள் ஆலோசகரிடம் அல்லது மருந்தாளரிடம் சொல்லுங்கள்.

**நிட்டிசினோன் காப்சூல்களைச் சேமித்துவைக்கும் முறை**

நிட்டிசினோன் காப்சூல்களைக் குழந்தைகளின் கைக்கும் பார்வைக்கும் எட்டாத இடத்தில் வைத்திருங்கள்.
நிட்டிசினோன் காப்சூல்கள் ஃப்ரிட்ஜில் (2-8$^{o}$ செல்சியசுக்கு இடைப்பட்ட வெப்பநிலையில்) சேமித்துவைக்கப்பட வேண்டும். நிட்டிசினோன் காப்சூல்களை அவற்றுக்குரிய பேக்கேஜிங்கில் வைத்திருங்கள், அவற்றுக்கு உள்ளே இருப்பவற்றை ஒளி படாமல் வைத்துக்கொள்ளுங்கள்.

லேபிளில் அச்சிடப்பட்டுள்ள காலாவதித் தேதிக்குப் பின்பு மருந்தை எடுத்துக்கொள்ளாதீர்கள். காலாவதித் தேதி, மாதத்தின் கடைசி நாளைக் குறிக்கிறது. மருந்துகளை வீட்டுக் குப்பையில் அல்லது வீணான நீரில் போடக் கூடாது. தரப்பட்ட காப்சூல்களில் சிலவற்றை மட்டுமே நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்றால், பயன்படுத்தாத காப்சூல்களை ஒரு மருந்தகத்தில் திரும்பத் தாருங்கள்.

**நிட்டிசினோன் காப்சூல்களில் என்ன இருக்கிறது?**

இந்த மருந்தில் உள்ள செயல்படும் உட்பொருள் நிட்டிசினோன் ஆகும். பிற உட்பொருட்கள்: முன்பே ஜெலட்டின் ஆக்கப்பட்ட மாவுச்சத்து (மக்காச்சோளம்), ஜெலட்டின், டைட்டானியம் டயாக்சைடு (E171), கருப்பு இரும்பு ஆக்சைடு (E172), ஷெல்லாக், ப்ரொப்பைலீன் கிளைக்கால்.

**தயாரிப்பின் உரிமம் பெற்ற நிலவரம்:**

பரம்பரை டைரோசினீமியா வகை-1 என்ற நிலைக்கு சிகிச்சையளிப்பதற்கு மட்டுமே நிட்டிசினோனுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது AKUவுக்கு நிட்டிசினோனைப் பயன்படுத்த உரிமம் அளிக்கப்படவில்லை. இதனால் நிட்டிசினோனைப் பயன்படுத்துவது பாதுகாப்பற்றது என்று பொருளாகாது. சிகிச்சையகத்தில் உங்கள் ஆலோசகர் இது பற்றி உங்களுக்கு விளக்குவார், நிட்டிசினோனை உங்களுக்குப் பரிந்துரைப்பதற்கு முன்பு அபாயங்களையும் நன்மைகளையும் பரிசீலிப்பார்.

இந்தத் தகவலேட்டில் உள்ள தகவல்கள் AKUவுக்கான நிட்டிசினோன் காப்சூல்களுக்கு மட்டுமே பொருந்தும். நீங்கள் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டும் என்றால் அல்லது உங்களுக்கு எது பற்றியாவது தெளிவாகத் தெரியவில்லை என்றால், உங்கள் ஆலோசகரை அல்லது மருந்தாளரைக் கேளுங்கள்.

**உங்களுக்கு மேலும் தகவலோ அறிவுரையோ தேவைப்பட்டால் யாரைத் தொடர்பு கொள்வது?**

நீங்கள் மேற்கொண்டு ஏதேனும் கேள்விகள் கேட்க விரும்பினால் தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளத் தயங்காதீர்கள். தேசிய அல்காப்டன்யுரியா மையத்தில் (NAC) உள்ள மருத்துவர்களும் பிற நலம்பேணல் தொழில்முறைப் பணியாளர்களும் நடைமுறை அனுபவத்தைக் கொண்டவர்கள்; நலம்பேணல் தொழில்முறைப் பணியாளர்களுக்காக எழுதப்பட்ட கூடுதல் தகவல்களை வைத்திருப்பவர்கள். இவர்கள் அத்தகவல்களைப் பயன்படுத்தி உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியும்.

## மேலும் தகவல்கள்

டாக்டர் எல். ரங்கநாத், சிகிச்சையக உயிர்வேதியியல் மற்றும் வளர்சிதை மாற்ற மருத்துவ ஆலோசகர்; 0151 706 4197.

டாக்டர் ஈ. மார்க்ஸ், சிகிச்சையக உயிர்வேதியியல் மற்றும் வளர்சிதை மாற்ற மருத்துவ ஆலோசகர்; 0151 706 4197.

டாக்டர் வி. மிஷ்ரா, சிகிச்சையக உயிர்வேதியியல் மற்றும் வளர்சிதை மாற்ற மருத்துவ ஆலோசகர்; 0151 706 4197.

வேலை நேரம் தவிரப் பிற நேரங்களில் 0151 706 2000 (தொலைபேசி இணைப்பகத்தில் மேற்கண்ட ஆலோசகர்களில் ஒருவருடன் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுங்கள்)

## மருந்தாளர்கள்

உங்கள் மருந்து பற்றி அறிவுரை பெற மருந்துகள் தகவல் (Medicines Information) சேவையை 0151-706-2096 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஆக்கம்: மருந்தக மற்றும் சிகிச்சையக வேதியியல் இயக்குநரகங்கள்
மீள்பார்வைத் தேதி: ஜூன் 2015

அறக்கட்டளையின் ஒப்புதலைப் பெற்ற எல்லாத் தகவல்களும் வேண்டுகோளின்பேரில் பிற மொழிகள், எளிதாகப் படிக்கும் வடிவம், பெரிய எழுத்து, ஒலி வடிவம், பிரெய்ல், மூன், மின்னணு வடிவம் உள்பட மாற்று வடிவங்களில் கிடைக்கின்றன.

يمكن توفير جميع المعلومات المتعلقة بالمرضى الموافق عليهم من قبل ائتمان المستشفى عند الطلب بصيغ أخرى، بما في ذلك لغات أخرى وبطرق تسهل قراءتها وبالحروف الطباعية الكبيرة وبالصوت وبطريقة برايل للمكفوفين وبطريقة مون والكترونياً.

所有經信托基金批准的患者資訊均可以其它格式提供，包括其它語言、 易讀閱讀軟件、大字體、音頻、盲文、穆恩體（Moon）盲文和電子格式，敬請索取。

در صورت تمایل میتوانید کلیه اطلاعات تصویب شده توسط اتحادیّه در رابطه با بیماران را به اشکال مختلف در دسترس داشته باشید، از جمله به زبانهای دیگر، به زبان ساده، چاپ درشت، صوت، خط مخصوص کوران، مون و بصورت روی خطی  موجود است.

زانیاریی پێوەندیدار بەو نەخۆشانەی لەلایەن **تراستەوە** پەسەند کراون، ئەگەر داوا بکرێت لە فۆرماتەکانی تردا بریتی لە زمانەکانی تر، ئیزی رید (هاسان خوێندنەوە)، چاپی گەورە، شریتی دەنگ، هێڵی موون و ئەلێکترۆنیکی هەیە.

所有经信托基金批准的患者信息均可以其它格式提供，包括其它语言、 易读阅读软件、大字体、音频、盲文、穆恩体（Moon）盲文和电子格式，敬请索取。

Dhammaan warbixinta bukaanleyda ee Ururka ee la oggol yahay waxaa marka la codsado lagu heli karaa nuskhado kale, sida luqado kale, akhris fudud, far waaweyn, dhegeysi, farta braille ee dadka indhaha la’, Moon iyo nidaam eletaroonig ah.